**<u>சுருக்கம்</u>**

சிறுபான்மையினர் நலன்– அனைத்து கிறித்தவப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் 2013–14 ஆம் ஆண்டிற்கான ரூ.1.00 கோடியை விடுவித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை</u>**

அரசாணை (நிலை) எண் 19 நாள் 11 . 2. 2015

திருவள்ளுவர் ஆண்டு 2046,
ஜய, தை 28,
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 120, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 25.12.2011
2. சிறுபான்மையினர் நல ஆணையரின் கடித எண். டிஎம்4/4328/2011, நாள் 14.7.2014 மற்றும் 18.12.2014.

-------

**<u>ஆணை:</u>**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், கிறித்தவர்கள் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் 2011–12 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்படி ஒரு பயனாளிக்கு ரூ.20,000/– வீதம் 500 பயனாளிகளுக்கு வழங்க, ஆண்டு தோறும் ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டு வருகிறது.

2. தற்போது, சிறுபான்மையினர் நல ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், 2013–14 ஆம் ஆண்டில் புனிதப் பயணம் செல்ல பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, கூர்ந்தாய்வு குழுவினால் தெரிந்தெடுக்கப்பட்ட 282 (234+48) விண்ணப்பங்களில் அடங்கிய 414 (343+71) பயனாளிகளின் பயணம் ஏற்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்டுள்ள முகவர்களுக்கு அப்பயனாளிகளின் பட்டியல் அளிக்கப்பட்டது என்றும், அவர்களுள் இதுவரை 329 பயனாளிகள் ஆறு குழுக்களாக புனிதப் பயணத்தினை நிறைவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், 2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட மொத்த நிதியான ரூ. 2.00 கோடியில் மார்ச் 2013 வரை 891 பயனாளிகள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டதற்கு செலவினமாக ரூ.1,78,20,000/– பயண முகவர்களுக்கு வழங்கியது போக மீதமிருந்த தொகை ரூ. 21.80 இலட்சத்தில் 15.9.2014 முதல் 19.1.2014 வரையிலான காலத்தில் புனித பயணம் மேற்கொண்ட 329 பயனாளிகளுள் நிதியிருப்பின் அடிப்படையில் 89 பயனாளிகளுக்கான தொகை, ரூ.17.80 இலட்சம் மட்டும், பயண முகவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், தற்போது தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகக் கணக்கின் இருப்பில், ரூ.4.00 இலட்சம் மட்டும் உள்ளது என்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. ஆகவே 2013–14–ஆம் ஆண்டிற்கான 500 பயனாளிகளுக்கான நிதி உதவித்தொகை ரூ.1.00 கோடி மற்றும் 2014–15 ஆம் ஆண்டிற்கு 500 கிறிஸ்தவர்களை ஜெருசலேம் புனிதப்பயணம் அனுப்பிட நிதி உதவி ரூ.1.00 கோடி, ஆக மொத்தம், ரூ.2.00 கோடியை விடுவிக்குமாறு அரசினை சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. சிறுபான்மையினர் நல ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு ஆய்வு செய்து 2013–14 ஆம் நிதியாண்டிற்குரிய 500 கிறிஸ்தவ பயனாளிகள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்வதற்கான நிதியுதவியாக ரூ.1,00,00,000/–யை (ரூபாய் ஒரு கோடி மட்டும்) 2014–15 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட நிதியொக்கத்திலிருந்து விடுவித்து ஆணையிடப்படுகிறது.

6. மேலும் 2014–15 ஆம் ஆண்டிற்கான புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயனாளிகளுக்கான நிதித் தேவையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கான புனிதப் பயண நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்பு கோரி அரசுக்கு தனியாக கருத்துருவினை அனுப்புமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> “2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 800 ஏனைய செலவு – I திட்டத்தில் சேராதது – AV கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள அரசு உதவித் தொகை – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை”
>
> (த.தொ.கு. 2235 – 60 – 800 – AV -0932)

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை ஆணையர், சிறுபான்மையினர் நலம் அவர்கள் பெற்று, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அவர்களுக்கு பணமாக வழங்கிடாமல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்க்காணும் தன்வைப்புக் கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைக்க வேண்டும்.

(k) Deposits and Advances
(b) Deposits not bearing interest.
8443 00 Civil Deposit
800 other Deposit
DF Deposits of Tamil Nadu Minorities Economic
Development Corporation (TAMCO).

(DPC 8443 00 800 DF 000A) (Receipt)
(DPC 8443 00 800 DF 0000) (Outgo)

9. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத் தொகையில் இந்நிதியாண்டில் செலவிடப்படாமல் தொகை ஏதேனும் மீதமிருப்பின் அத்தொகையினை 31.3.2015–க்குள் அரசுக் கணக்கில் செலுத்திட சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

10. மேலும், இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டவுடன் பயனீட்டுச் சான்றிதழை பெற்று (Utilisation Certificate) உரிய காலத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண் 6110/பி,மி.பி/15, நாள் 7.2.2015– ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

S. விஜயகுமார்
அரசு செயலாளர் (பொ)

பெறுநர்
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை–2.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர்,(துணிக்கை I & II), சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9.
நகல்
முதன்மைச் செயலர்/ ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை–5
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை–5
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(பிந/வ.செ.பொது.I / வ.செ.பொது.II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்